

கும்பகோணம் மாநகர தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தொகுதி பார்வையாளர் சீ.க.மறைமலை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, மாவட்ட பொருளாளர் ஜெ.நடராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மண்டல குழு தலைவர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட திமுக சார்பில் கும்பகோணம் பைபாஸ் சாலையில் உள்ள கலைஞர் கோட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, ஜெ.நடராஜன் ஆகியோர் தலைமையில் குடந்தை மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.கே.முத்துச்செல்வன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெ.சுதாகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

# நாகைக்கு வருகை தரும் முதல்வருக்கு கீழ்வேளூரில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன்,மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன் கற்பகம் நீலமேகம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபாண்மை அணி துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பாண்டியன், எஸ்.பன்னீர்செல்வம், கோசி.குமார், இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், உமா செந்தாமரை, பேரூர் கழகச் செயலாளர்கள் க.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், சி.சுப்பரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன் அ.பாரிபாலன், க.சத்தியமூத்தி, ஆர்.துரைராஜ், இளம்சுந்தர், பால.முரளி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, ஆர்.துரைராசு, கே.எஸ்.சாகுல்ஹமீது, இளம்.சுந்தர், ப.உதயக்குமார், த.தமேந்தி, ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், எஸ்.சந்தோஷ், எம்.தினேஷ்குமார், எஸ்.வெற்றிச்செல்வன், ஆர்.சுரேந்தர், வ.கமல், எஸ்.பாலமுரளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எஸ்.அசோக், ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாபெரும் அரசியல் இயக்கத்தின் தலைவர்தமிழ்நாட்டின் முதலமைச்சர், இந்திய திருநாட்டின் முதல்வர்களுக்கு எல்லாம் முன்மாதிரி முதல்வர், பாசிசத்தை அடியோடு ஒழிக்க உறுதி பூண்டு செயலாற்றி வரும் தலைவர், தழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முன்மாதிரியான மாநிலமாக உருவாக்கி காட்டிய தன் மூலம் இந்திய திருநாட்டின் பொருளாளதார வல்லுனர்கள், அறிஞர்கள் அனைவரும் திரும்பி பார்க்கும் வகையில் செயலாற்றி வரும் 72 வது அகவையில் அடி எடுத்து வைக்கும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வது என்றும், மாவட்டம் முழுவதும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து மாவட்டம் முழுவதும் சுவர் விளம்பரம் எழுதிய கழகத்தினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு கடந்த மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி கழகத் தலைவர், தளபதி அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1 மற்றும் ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாட கழக நிர்வாகிகள், கழகத்தினரை கேட்டுக் கொள்வது என்றும்

பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட இருமொழிக் கொள்கைக்கு எதிராக மும்மொழி திட்டத்தை திணிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு எதிராக போராட்டத்தை கழகத்தினர் நாகை முழுவதும் நடத்தியும், வீடுகளில் இந்தி திணிப்புக்கு எதிராக கோலங்களை இட்ட பெண்களுக்கும் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்.

ஒன்றிய அரசு நீட் தேர்வு, க்யூட் தேர்வு, தேசியக் கல்வி கொள்கை, யூ.ஜி.சி.2025 வரைவு விதிமுறைகள் என தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் மாநில உரிமைகளை சிதைக்கும் வகையில் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையை பறிக்கும் விதமாக செயல்பட்டு வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தற்போது உயிரிலும், உணர்விலும் கலந்துள்ள தாய்த்தமிழை அழித்து இந்தியை திணிக்கும் மும்மொழி கொள்கையை கட்டாயமாக்கும் பாசிஸ்ட்டுகளின் வஞ்சக செயல் திட்டத்திற்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டனத்தை தெரிவித்துக் கெள்வது என்றும்.

நாகை புத்தூர் ஆர்ச் அருகே கலைஞர் அரங்கில் நடைபெறும் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் இல்லத் திருமண விழாவிற்கும்நாகை நகரத்தின் மற்றொரு அடையாள சின்னமாக எழிலோடும், பொழிவோடும் கம்பிரமாக புதிதாக கட்டுப்பட்டுள்ள மாவட்ட கழக அலுவலகமாக எழுந்து நிற்கும் தளபதி அறிவாலயம் திறப்பு விழாவிற்கும், தளபதி அறிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் சிலை திறப்பு விழாவிற்கும், எழை, எளிய மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கும் விழா மற்றும் தளபதி அறிவாலயத்தில் முதல் கூட்டமாக நாகை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்திலும் பங்கேற்க வருகை தரும் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு 2.3.2025 அன்று இரவு 8.00மணிக்கு நாகை மாவட்ட எல்லையான கீழ்வேளூரில் நாகை திருவாரூர் தேசிய நெடுஞ்சாலை பைப்பாஸ்சில் மாவட்ட தி.மு.க. சார்பில் வழங்கப்படும் வரவேற்பு நிகழ்ச்சியிலும்,

அதைத் தொடர்ந்து 3.3.2025 அன்று நடைபெறும் நிகழ்ச்களிலும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றும்

ஒன்றிய பா.ஜ.க. அரசு மும்மொழி கொள்கையை ஏற்றால் தான் நிதி தருவோம் என்று பிளாக்மெயில் செய்து அரசியல் செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திராபிரதான் க்கும் நாகை தி.மு.க. சார்பில் வண்மையாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதோடு உடனடியாக ஒன்றிய அரசு தமிழக கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய ரூ. 2152 கோடி கல்வி நிதியை உடன் வழங்கிட வேண்டும் என்றும்

2026 சட்ட மன்ற தேர்தலில் கழகத்தலைவர் தலைவர் அவர்கள் இலக்கான 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெல்வோம் என்ற இலக்கை எட்டும் வகையில் நாகை மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளுக்கு அறிவிக்கும் வேட்பாளர் அதிக வாக்குகள் வித்தியாகத்தில் வெற்றிப் பெற செய்திடும் வகையில் நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி கழகத்தினர் திண்ணை பிரச்சாரத்தை தொடங்கிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா சிலை அருகே ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் பட்டாசு வெடித்தும் பொதுமக்கள், பேருந்து பயணிகள், வணிகர்கள் என அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் கீழ்வாசல் பகுதி செயலாளர் மேத்தா, பொதுக்குழு உறுப்பினர் ஆறுமுகம், மண்டலக் குழு தலைவர் புண்ணியமூர்த்தி, மண்டல குழு தலைவர் ரம்யா சரவணன், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணியினர், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் ராஜேஸ்வரி ஏற்ப்பாட்டில் புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட 39 வது வார்டில் இரண்டு இடங்களில் கழக கொடி ஏற்றி சர்க்கரை பொங்கல் வழங்கியும் தண்ணீர் குடங்கள் வழங்கியும் கொண்டாடப்பட்டது..நிகழ்வில் மாநகர கழக அவை தலைவர் ரெத்தினம், துணை செயலாளர் மணிவேலன், வட்ட கழக செயலாளர் அண்ணாதுரை, வட்ட கழக நிர்வாகிகள் சோமையா, விஜயகுமார், செல்லபெருமாள், நடராஜன், செல்வமணி ஆகிய வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்:

# திருச்சி மத்திய மாவட்டத்தில் தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.வைரமணி அறிக்கை!



திருச்சி, மார்ச்.3 -

திருச்சி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் க. வைரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வழக்கறிஞர் மதிவதனி, 2.03.2025 - பூவாளூர் இலால்குடி ஒன்றியம்,

பேராசிரியர் சபாபதி மோகன் - 3.03.2025 - துறையூர் ஒன்றியம்,

தமிழன் பிரசன்னா - 3.3.2025 - சாத்தார வீதி திருவரங்கம் பகுதி,

பேராசிரியர் சபாபதி மோகன் - 4.3.2025 - நவலூர் குட்டப்பட்டு மணிகண்டன் ஒன்றியம்,

தமிழகன் பிரச்சன்னா - 4.3.2025 - உப்பிலியபுரம் ஒன்றியம்,

தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. - 5.3.2025 - புள்ளம்பாடி ஒன்றியம்,

கரூர் முரளி - 6.3.2025 - விக்னேஷ் ஹோட்டல் அருகில் பொன்னகர் பகுதி,

கரூர் முரளி, 9.3.2025 - தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம்,

நாஞ்சில் சம்பத் - 10.3.2025 - பெட்டவாய்த்தலை அந்த நல்லூர் ஒன்றியம்,

நாஞ்சில் சப்ம் - 11.3.2025 - செடல் மாரியம்மன் கோவில் பீமநகர், அண்ணா நகர் பகுதி,

சேலம் சுஜாதா - 12.3.2025 - நெ.1 டோல் கேட், மண்ணச்சநல்லூர் ஒன்றியம்,

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் - 15.3.2025 - மணப்பாறை (கி) ஒன்றியம்,

ஈரோடு இறைவன் - 23.3.2025 - மண்ணச்சநல்லூர் (ம) ஒன்றியம்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி சார்பில் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச்செழியன் தலைமையில் தி.மு.க. சட்டத்துறை மாநில இணைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி மற்றும் அணி நிர்வாகிகள் முன்னிலையில் கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தின் முன்புறம் பட்டாசு வெடித்தும் பொது மக்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இனிப்புகள் வழங்கியும் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப்புத்தகங்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் வழக்கறிஞர் அணித்தலைவர் மருதுபாண்டியன், துணை தலைவர் மணிவேல்,துணை அமைப்பாளர்கள் விக்ரம்,சலாவுதீன், ஆசைத்தம்பி, எலிசபத்ராணி, கனகராஜ், சந்திரமோகன், எஸ்.ரவிச்சந்திரன், வி.ரவிச்சந்திரன், ராஜப்பன், கிருஷ்ணமூர்த்தி, விஜயராகவன், ராஜமாணிக்கம், சி.என்.சந்திரன், வெற்றி, முத்துகுமார்,அமுல்ராஜ், டி.ரவிசந்திரன், மதிவாணன், முருகானந்தம்,ரீஹரி, தமிழ்குடிமகன், ராஜ்குமார்,ரீதர், லிங்காஜா,மகேஸ்வரி, செண்பகவள்ளி,ஜீவா, லலிதா,சித்ரா உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞர்கள், மகளிர் வழக்கறிஞர்கள்,இளம் வழக்கறிஞர்கள் என 200 மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏர்வாடி அலிசேக் மன்சூர்

**மார்ச் 3 (2013)**



தி.மு.க. தொடக்க நாட்களிலேயே தென் மாவட்டங்களில் கழகக் கொள்கைகளைப் பரப்புவதில் மாணவப் பருவம் முதல் ஆர்வமுடன் ஈடுபட்ட சிறந்த பேச்சாளரும் – கழகத்தின் மூத்த முன்னோடியும் – எந்நிலையிலும் தடம் மாறாதவர் இவர்.

கழக வரலாற்றில், முதல் நெல்லை மாவட்ட தி.மு.க. மாநாட்டுச் செயலாளர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொழிப் போர் வீரர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“தான் கருப்புச் சட்டை அணிந்த காலத்திலேயே தன்னை அழைத்து, கூட்டம் நடத்தியவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**